லலித் அதுலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லலித் அதுலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் (நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	முன்னைய ஆண்டின் ஏனைய சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட நிலையான வைப்பு மீளாய்வாண்டின் போது நிதிச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் வகைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்ட இந்த மாற்றங்களுக்கு உரிய இலங்கைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 41 ஆம் பந்தியின் பிரகாரம் ஒப்பீட்டு ரீதியான பெறுமதி மீண்டும் வகைப்படுத்தப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்களின் வகைப்படுத்தலில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களுக்கு உரிய கடந்த ஆண்டின் ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகளும் மீள மீண்டும் வகைப்படுத்தப்படல் வேண்டும்.
(ஆ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்து ஒன்றின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் ஆகக் குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியின் போதும் மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்துதுடன் வேறுபாடுகள் இலங்கை கணக்கீட்டு நியமம் 08 கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்களாக கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்து	நிதியத்தின் நிறைவேற்று பதவிகள் யாவும் தற்போது வெற்றிடமாகக் காணப்படுவதுடன் வரையறுக்கப்பட்ட பதவியணியினரைக் கொண்டு கடமைகள் நிறைவேற்ற வேண்டி ஏற்பட்டிருந்தது. இது தொடர்பாக	முழுமையாக பெறுமானத் தேய்வு செய்து முடிவடைந்த போதும் தற்போதும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வருடாந்தம் மீளாய்வு மேற்கொள்ள வேண்டி இருந்ததுடன்

	பூர்த்தி செய்யப்பட்ட போதும் தற்போதும் பயன்படுத்தப் படுகின்ற மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கிரயம் ரூபா 16,473,018 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. நியமத்தின் 79(ஆ) பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் மேற்கூறப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக உரிய வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட தற்காலிக செயற்பாடற்ற ரூபா 10,748,100 பெறுமதியான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் இருப்பு தொடர்பாக நியமத்தின் 79(அ) மற்றும் (இ) பந்திகளின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் அறிக்கையிடப்படும்.	தேவையான வெளிப்படுத்தல்களும் செய்தல் வேண்டும்.. தற்காலிகமாக விளைவற்ற சொத்துக்கள் தொடர்பாகவும் உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(இ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 40 இன் 16 ஆம் பந்திக்கு முரணாக 99 வருட வாடகை அடிப்படையின் கீழ் பெற்றுக் கொள்வதற்கு இணங்கி நகர அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து பௌதீக உரித்து மாத்திரம் கையளித்தல் அடிப்படையில் ரூபா 340,200,000 முற்பணம் ஒன்று செலுத்தப்பட்டு கைப்பற்றும் நடவடிக்கைகள் பூரத்தி செய்யப்படாது இருந்த மில்லே வத்த பெயருடைய காணி மற்றும் வருமானம் உழைப்பதற்காக உடன்படிக்கைகள் கைச்சாத்திடாது இருந்த மாலபே இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (SLIIT) நடாத்திச் செல்கின்ற பெறுமதி ரூபா 1,064,520,695 ஆன கட்டிடங்கள், முதலீட்டு ஆதனங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	இது தொடர்பாக தடைவியல் கணக்காய்வு மேற்கொள்வதற்கு நம்பிக்கை பொறுப்பு சபை தீர்மானித்துள்ளது.	இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 32 மற்றும் 33 ஆம் பந்திகளின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினங்கள் ஈடு செய்ய முடியாது இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது மஹாபொல உயர்கல்வி மாணவர் உதவிக்கான அரசாங்கத்தின் பங்களிப்பாக பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு ஊடாக கிடைத்த ரூபா 1,286,146,850 வருமானம் மஹாபொல மாணவர் உதவி செலவினத்துடன் ஈடு செய்யப்பட்டிருந்தது. அதற்குரிய நேர் செலவினத்தின் கீழான குறிப்புக்களில் மஹாபொல உயர்கல்வி மாணவர் உதவிப் பணம் செலுத்துதல் மற்றும் பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவில் இருந்து கிடைத்த மாணவர் உதவித் தொகை (மஹபொல மாணவர் உதவி அல்லாத) ரூபா 213,628,000 தொகையும் உள்ளடக்கப்பட்டதன்	அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் பங்களிப்பு குறிப்பிடப்பட்டுள்ளது.	இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினங்கள் சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

காரணமாக குறிப்பில் காண்பிக்கப்பட்ட ஆண்டின் மஹாபொல மாணவர் வருமானம் மற்றும் செலவினம் அப்பெறமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு திறைசேரி உண்டியலின் அடிப்படையில் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 170,440,105 ஆக இருந்த போதிலும் கணக்காய்வின் கணிப்பீட்டின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 275,993,745 ஆனமையால் வட்டி வருமானம் மற்றும் சொத்துக்கள் ரூபா 105,553,640 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	சரிசெய்யப்பட்டுள்ளது.	பெற வேண்டிய வட்டி வருமானம் சரியாகக் கணிப்பிட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	கொடுப்பனவு உறுதிச் சீட்டின் பிரகாரம் 2022/2023 கல்வியாண்டிற்காக புலமைப் பரிசில் பெறுநர்களைப் தெரிவு செய்யும் நடவடிக்கைகளுக்காக பல்கலைக்கழகம் மானியங்கள் ஆணைக்குழுவிற்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 960,515 ஆகவும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 2,232,731 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக பொறுப்புக்கள் மற்றும் செலவினங்கள் ரூபா 1,372,216 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	இது 2020/21 , 2021/22 மற்றும் 2022/23 ஆம் ஆண்டுகளுக்காக செலுத்த வேண்டிய பணமாகும்.	ஆண்டிற்குரிய செலவினம் மற்றும் பொறுப்புக்கள் சரியாக இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	செலுத்த வேண்டிய மஹாபொல மாணவர் உதவித் தொகைக் கணக்கின் ஆரம்ப மீதி 8,042,000 அதிகரித்து குறிப்பிடப்பட்ட தவறை சரி செய்யம் போது நிறுத்தி வைத்தல் உழைப்புக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் இருந்து கிடைக்க வேண்டிய கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.	இந்த சரி செய்தல்களை மேற்கொள்ளல் புலமைப் பரிசில் செலுத்தும் கணக்கின் மற்றும் பெற வேண்டிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்ற இரண்டு கணக்கின் இடையில் ஆகும்.	பிழைகளை சரி செய்யும் போது உரிய கணக்குகளை சரியாக இனங்கண்டு சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைதகள்	பரிந்துரைகள்
நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் திறைசேரி பிணை முறிகளின் அடிப்படையில் பெறுமதி ரூபா 377,273,000 ஆக இருந்த	நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்ள பெறுமதிக்காக Deal Note காணப்படவில்லை.	நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதிகள் உரிய

போதிலும் அதற்கு நேரொத்ததாக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 200,273,000 ஆனமையால் ரூபா 177,000,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	முகப் பெறுமதிக்கான Deal Note ஏற்கனவே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	பட்டோலைகளுடன் இணக்கஞ் செய்யப்படல் வேண்டும்.

1.5.4 ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைதகள்	பரிந்துரைகள்
நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முழுமையான உரித்துடன் உள்ள துணைக் கம்பனியான நெஷனல் வெல்த் கோபரேசன் மற்றும் உப துணைக் கம்பனியான நெட்வெல்த் செக்குயுரிடீஸ் கம்பனியினுடன் இலங்கைக் கணக்கீட்டு நியமம் 26 இன் பிரகாரம் தயாரிக்க வேண்டிய ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான காலப் பகுதிக்காக தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.	நெட்வெல்த் செக்குயுரிடீஸ் மற்றும் நெஷனல் வெல்த் கோபரேஷன் என்ற கம்பனிகளுக்காக நிதிக்கூற்றுக்கள் உரிய பிரகாரம் தயாரித்து சமர்ப்பிக்குமாறு அதன் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதியத்தின் துணைக் கம்பனிகளுடன் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

	விடயம்	தொகை ரூபா	சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் வாடகை வருமானம்	25,000,000	வாடகை உடன்படிக்கையின் மூல பிரதி மற்றும் வாடகை கணிப்பீட்டு உரிய அறிக்கை	நிழற்பட பிரதி மாத்திரம் அலுவலகத்தில் உள்ளது.	வாடகை உடன்படிக்கையின் மூலப் பிரதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	நெட்வெல்த் செக்குயுரிட்டீஸ் கம்பனியின் வங்கி கணக்கிற்கு மாற்றுதல்	7,200,000	நம்பிக்கைப் பொறுப்பு சபையின் அங்கீகாரம் மற்றும் உரிய பணம் கம்பனிக்கு கிடைத்ததை உறுதிப்படுத்தும் கடிதம்	இது தொடர்பாக தடயவியல் கணக்காய்வை மேற்கொள்வதற்கு நம்பிக்கை பொறுப்பு சபை தீர்மானித்துள்ளது.	நம்பிக்கை பொறுப்பு சபை அங்கீகாரம் மற்றும் உரிய பணம் கம்பனிக்கு கிடைத்தமையை உறுதிப்படுத்திய கடிதம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெற வேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மஹபொல சந்தைக் கண்காட்சிகளுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 40,791,005 மற்றும் வியாபாரம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா	இது தொடர்பாக தடயவியல் கணக்காய்வை மேற்கொள்வதற்கு நம்பிக்கை பொறுப்பு சபை திர்மானித்துள்ளது.	பெற வேண்டிய மீதிகளை உறுதிப்படுத்தி உரிய தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	1,021,450 மீதி உறுதிப்படுத்தல் ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாது இருந்ததுடன் இந்த பெறுமதி செலுத்த வேண்டிய மீதியாக உரிய கம்பனிகளின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	நிதியத்தின் அலுவலகம் முன்னர் நடாத்திச் செல்லப்பட்ட ஜே.ஆர். ஜயவர்த்தன நிலையத்திற்கு வைப்புச் செய்யப்பட்ட ரூபா 1,811,700 வாடகை வைப்பு அந்த நிலையத்தில் இருந்து விலகிச் சென்று 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2023 மே 01 ஆந் திகதி வரையும் ஜே.ஆர்.ஜெயவர்த்தன நிலையத்தின் மஹபொல அலுவலகத்தை நடாத்திச் செல்லப்படுவதுடன் அதன் பின்னர் பல சந்தர்ப்பங்களின் போது ஆன வைப்புத் தொகையான ரூபா 1,811,700 தொகை கோரி அனுப்பப்பட்டுள்ளது.	அறவிட வேண்டிய வைப்புப் பணத்தை விரைவாக அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6.2 செலுத்த வேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சில பாடசாலையில் இடம்பெற்ற நிர்மாண நடவடிக்கைகளுக்காக பாடசாலை அபிவிருத்தி சங்கங்களுக்கு நிதியத்தில் இருந்து செலுத்த வேண்டிய செலவினங்களின் ரூபா 3,832,775 கூட்டுமொத்தம் 2013 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட போதிலும் உரிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	நம்பிக்கைப் பொறுப்பு சபை அங்கீகாரத்தின் பிரகாரம் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.	உரிய தரப்பினரை இங்கண்டு கொடுப்பனவுகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப்பரிசில் செலுத்துவதற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக்கு அனுப்பப்பட்ட தவணைப் பணத் தொகையில் மாணவர்களின் பெயர், கணக்கு இலக்கம் போன்ற தகவல்கள் உறுதிப்படுத்தாமையின் காரணமாக வங்கியினால் மீள அனுப்பப்பட்டமையால் செலுத்த வேண்டிய செலவினமாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 3,851,703 தீர்த்து வைத்து உரிய மாணவர்களுக்கு மீண்டும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மேலும் செலுத்த வேண்டிய மீள திருப்பி அனுப்பட்ட தொகை எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் செலுத்தி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது பல்கலைக்கழகத்தை விட்டுச் சென்ற மற்றும் கல்வி சார் நடவடிக்கைகளை பூர்த்தி செய்த மாணவர்கள் மற்றும் சரியான வங்கிக் கணக்கு விபரங்கள் அனுப்பாது இருந்த மாணவர்களின் கொடுப்பனவுகள் தொடர்ந்தும் எஞ்சியிருந்தமையினால் அவற்றை அகற்றுவதற்கு	புலமைப் பரிசில் செலுத்த வேண்டிய மாணவர்களுக்கு உரிய பணத்தை செலுத்தி செலுத்த வேண்டி மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		இந்த பெறுமதிகளைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.	

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 2(1) மற்றும் 102 ஆம் பிரிவுகள்	நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் வருமான வரிக்காக பதிவு செய்வதற்கோ அல்லது வரி விடுதலைப் பெற்றுக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வருமான வரிக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது. 1981 இன் 66 ஆம் இலக்க மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் வருமானங்கள் வரிகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.	சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருமான வரிகளில் இருந்து விடுவிக்கப்படுகினறமைக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் இருந்து உறுதிப்படுத்தல் வேண்டும்.
(ஆ)	2019 சனவரி 29 ஆந் திகதி இலக்கம் 2/2019 என்ற பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவு	(i) மஹபொல உயர் கல்வி மாதாந்தப் புலமைப் பரிசில் தவணைப் பணத்திற்கு உரிய பணம் உரிய மாதத்தின் 15 ஆந் திகதி வரையில் மாணவர் நலனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்க வேண்டியிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டின் சனவரி முதல் திசெம்பர் வரை மாதாந்தம் புலமைப் பரிசில் தவணைப் பணம் செலுத்தும் போது 31 சந்தர்ப்பங்களின் போது 45 – 190 நாட்களுக்கு இடையிலான கால தாமதம் காணப்பட்டது.	பல்கலைக் கழகத்தால் கோரிக்கை இடுவதில் தாமதம் ஏற்பட்டமை மற்றும் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் திறைசேரி பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளும் போது ஏற்படுகின்ற தாமதங்களின் காரணமாக தாமதம் ஏற்பட்டு இருந்தது. அதனால் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை ஆலோசனையின் அடிப்படையில் திறைசேரி பங்களிப்பு வர்த்தக அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் வழங்கப்படுவதாக தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தில் இருந்து கோரப்பட்டுள்ளது.	மஹாப்பொல உயர்கல்வி புலமைப் பரிசில் தவணைப் பணம் குறித்துரைத்த காலத்தில் செலுத்துவதற்கு முறையான திட்ட முறைமை ஒன்று விரைவாக தயாரிக்கப்படல் வேண்டும்.
		(ii) மாதாந்த புலமைப் பரிசில் செலுத்தும் பதிவேட்டில் கடந்த மாதத்தில் 30 ஆந்	உயர்கல்வி நிறுவனங்களில் இருந்து கோரிக்கை	குறித்துரைத்த திகதியில் தேவையான ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கு

திகதி வரையில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் உயர்கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பபட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டின் மொறட்டுவ மற்றும் களனி பல்கலைக்கழங்களுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது இந்த பல்கலைக்கழகத்திற்கு நிதியத்தால் செலுத்தும் ஆவணங்களை அனுப்பும் போது முறையே 59 – 118 நாட்களுக்கு இடையிலும் 40 – 95 இற்கு இடையிலான கால தாமதமும் காணப்பட்டது.	இடும் போது தாமதம் ஏற்பட்டு இருந்தது.	முறையான திட்ட முறைமை ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,261,478,730 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னை ஆண்டின் மிகை ரூபா 3,752,507,174 ஆகும். அதன் பிரகாரம் நிதிவிளைவுகளில் ரூபா 1,491,028,444 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு வருமானம் ரூபா 747,478,422 இனாலும், ஏனைய விரிவான வருமானம் ரூபா 703,202,233 இனாலும் குறைவடைந்தமையும், புலமைப் பரிசில் செலுத்துதல் ரூபா 45,023,863 இனால் அதிகரித்தமையும் பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2023 திசெம்பர் 13 முதல் 17 வரை ஜாஎல நகர சபை விளையாட்ரங்கில் நடாத்தப்பட்ட மஹபொல வர்த்தகக் கணக்காட்சிக்காக கடந்த ஆண்டில் ரூபா 126,874,496 மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 618,373 செலவிடப்பட்டிருந்ததுடன் நிதியத்தின் வருமானம் ரூபா 2,343,035,448 ஆனமையால் கண்காட்சிகளில் இருந்து ரூபா 29,665,257 நட்டம் பெறப்பட்டிருந்தது. மேலும் 2024 மே மாதம் அனுராதபுரத்தில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட வர்த்தகக் கண்காட்சிகளுக்காக ரூபா 8,552,128 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த	இது தொடர்பாக தடைவியல் கணக்காய்வு மேற்கொள்வதற்கு நம்பிக்கைப் பொறுப்பு சபை தீர்மானித்து உள்ளது. அவ்வாறே நம்பிக்கை பொறுப்பு சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.	ஜாஎல கண்காட்சியில் நட்டம் பெற்றமை மற்றும் அனுராதபுரக் கண்காட்சி நடாத்தப்படாமை தொடர்பான பரிசோதனைகளை செயற்திறனாக நடாத்தி பொறுப்பு வாய்ந்த நபர்களிடம் இருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

போதிலும் வர்த்தகக் கண்காட்சிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நோக்கமாக இளைஞர்களின் தொழிற் திறனை அதிகரித்து அவர்களுக்கு தொழில் பயிற்சி நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்காக மாலை தீவில் அமைந்துள்ள காணி ஒன்று கடுவல பிரதேச செயலாளரிடம் இருந்து 2000 ஆண்டின் போது கையேற்கப்பட்டிருந்ததுடன் காணி கையளித்தல் கடிதத்தில் நிபந்தனைகளின் பிரகாரம் காணி கைப்பற்றப்பட்ட பணிகள் தவிர ஏனைய பணிகளுக்காக ஈடுபடுத்த முடியாது இருந்தல் வேண்டும். எனினும் இந்தக் காணி கையேற்கப்பட்ட நோக்கத்திற்கு முரணாக 2015 ஆம் ஆண்டு முதல் அந்த காணி இலங்கை தகவல் தொழில் நுட்ப நிறுவனம் (SLIIT) இற்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது.	இது தொடர்பாக COPE குழு எதிர்காலத்தில் விடயங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அமைச்சரவை பொருத்தமான தீர்மானம் எடுக்கும்.	அதற்குப் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ) 1981 இன் 66 ஆம் இலக்க மஹாபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பிரதான நோக்கங்கள் 5 இற்கு இடையே நிதி உதவி பெற்றுக் கொள்வதற்கு தகுதியான இளைஞர் யுவதிகளுக்கு உயர்கல்விக்காக உதவித் தொகை வழங்குதல் என்ற நோக்கம் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022/2023 கல்வி ஆண்டிற்குரிய பல்கலைக்கழகத்திற்கு சேர்க்கப்பட்ட மற்றும் புலமைப் பரிசில் பெற்றோருக்கு தகைமை பெற்ற 42,147 மாணவர்களுக்காக மஹாப்பொல புலமைப்பரிசில் கையளித்தல் இலக்கிடப்பட்டிருந்த போதிலும் பெற்றோர்களினால் உழைக்கப்படுகின்ற வருடாந்த வருமானம் ரூபா 500,000 இற்கு குறைவாக இருக்க வேண்டிய அளவுகோலினை	காணப்படுகின்ற நிதியை முகாமைத்துவம் செய்து புலமைப்பரிசில் செலுத்தப்படுவதுடன் 2025 ஏப்ரல் மாதம் முதல் புலமைப் பரிசில் தவணைப் பணம் ரூபா 7,500 வரை உயர்த்தப்பட்டிருந்தது. அவ்வாறே உயர் தொழில் நுட்ப நிறுவனம் மற்றும் ஏனைய நிறுவன மாணவர்களுக்காக கையளிக்கப்படுகின்ற புலமைப் பரிசில் தவணைப் பணமும் சமமான அளவில் உயர்வடைந்துள்ளது.	நிதி உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு தகைமை பெறுகின்ற சகல மாணவர்களுக்கும் புலமைப் பரிசிலைக் கையளிக்கக் கூடிய திட்ட முறைமை ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும்.

	அடிப்படையாகக் கொண்டதன் காரணமாக 2022/2023 கல்வி ஆண்டிற்குரிய மஹபொல புலமைப் பரிசில் பெற்றுக் கொள்வதற்கு தகைமை பெற்ற 23,560 மாணவர்களாக இருந்ததுடன் அவர்களுக்கு இடையே 17,000 மாணவர்களுக்கு மாத்திரம் புலமைப்பரிசில் கையளிக்கப் பட்டிருந்தது.		
(ஆ)(i)	2013 யூலை 30 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்பட்ட மங்கத்த லொத்தருக்காக தெரிவு செய்யப்பட்ட லொத்தளாளரினால் அதில் இருந்து விலகியதன் காரணமாக நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 750 மில்லியன் கிடைக்காமை தொடர்பாக உள்ளக விசாரணை ஒன்று நடாத்துவதற்கும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி உரிய உத்தியோகத்தருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் 2021 சனவரி 08 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழு கூட்டத்தின் போது கட்டளை வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	இது தொடர்பாக இலஞ்ச ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக் குழுவில் விசாரணையில் உள்ளது.	பொது முயற்சிகள் குழுவின் கட்டளையின் பிரகாரம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி உரிய உத்தியோகத்தருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்தலை துரிதப்படுத்துதல் வேண்டும்.
(ii)	இணையவழி லொத்தர் ஒன்றை மீண்டும் ஆரம்பிப்பதற்காக 2021 ஒக்தோபர் 18 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் முறையான பெறுகைத் திட்ட முறைமை ஒன்றின் கீழ் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு உரிய ஒப்பந்தத்தை கையளிப்பதற்காக 2023 பெப்ரவரி மாதத்தின் போது பெறுகைக் குழு அங்கீகாரம் மற்றும் உதவி நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் இணைவளி லொத்தர் அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை.		இணைவழி லொத்தர் அமுல்படுத்தப்படுத்துதலை விரைவு படுத்துதல் வேண்டும்.

3.4 மனத வள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் சிரேஸ்ட முகாமையாளர் மட்டத்தில் பதவிகள் (பணிப்பாளர்), நடுத்தர முகாமைதத்துவ மட்டத்தில் 03 பதவிகள், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலையில் 14 பதவிகளில் 03 பதவிகள் 2025 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டது. அவ்வாறு ஊழியர் வெற்றிடங்கள் காணப்பட்டமை பல்கலைகழகம் மற்றும ஏனைய உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர்களுக்கு குறித்துரைத்த திகதியில் மஹாபொல புலமைப்பரிசில் உதவித் தொகையை செலுத்தும் நிறுவனத்தின் ஏனைய நடவடிக்கைகள் தொடர்பிலும் பாதகமாக தாக்கமளித்திருந்தது.	நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஊழியர் வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பாக பிரதமர் அலுவலகத்தில் இருந்து அங்கீகாரம் கிடைத்தமையால் சிரேஸ்ட முகாமையாளர் மற்றும் மத்திய முகாமைத்துவ மட்டத்தின் பதவிகள் மற்றும் இரண்டாம் நிலையில் பதவிகள் சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதுடன் அந்த பதவிகளை சேர்த்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	அத்தியாவசிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.